*1974 மார்ச் 26]*

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வேளாண்மைத்துறை மானியத்தில் இதுபற்றி கூறப்பட்டவுடனேயே, நான் கன்னியா குமரி மாவட்டத்திற்கு ஏற்ற ஹையஸ்ட் யீல்டிங் வெரைடி என்ன என்று கேட்டேன். ஏ. எஸ். டி. 1 முதல் 14 ரகங்கள் விளைவிக்கலாம் என்று சொன்னார்கள். மேலும் இதுபற்றி ஆராயச் சொல்லியிருக்கிறேன். விவரம் தெரிந்தவுடன் அறிவிக்கிறேன்.

**திரு. ஏ. எம் இராஜா:** வருடம் முழுவதும் பயிரிடக்கூடிய ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20, ஜெயா, பாலா போன்றவற்றுக்கு எல்லாம் நைட்ரஜன் 75 கிலோ தேவைப்படும். ஆனால் பவானிக்கு 50 கிலோ இருந்தால் போதும். குறைந்த ரசாயன உரத்தைக் கொண்டு பயிரிடக்கூடிய பவானிக்கு ஸ்பெஷல் ஊக்கம் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** எத்தனை டன் ஒரு ஏக்கருக்கு அதிகம் உற்பத்திசெய்ய முடியும் என்பதைப் பொறுத்திருக்கிறது நைட்ரஜன் உரம் கொடுப்பது. 50 கிலோவுக்கு ஒன்றேமுக்கால் டன் விளைச்சல் கிடைக்கும். அதிக விளைச்சல் வேண்டுமென்றால் அதிக உரம் கொடுக்க வேண்டும்.

*** 616 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் ஒருபோகச் சாகு படியிலிருந்து இருபோகச் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்ட நிலங்கள் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** 2,65,600 எக்கர்கள்.

*** 617. வினா—திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அதிகமாக நெல் விளைச்சல் செய்யும் விவசாயிகளுக்குப் பரிசு வழங்கும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** கிராம, வட்டார, மாவட்ட, மாநில அளவுகளில், ஆண்டுதோறும், நெல் விளைச்சல் போட்டிகள் நடைபெறுகின்றன. பரிசுகளும், "வேளாண்மைச் செம்மல்" என்ற பட்டமும் வழங்கப்படுகின்றது.